மாணிக்காபுரம் கிராம ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை : திருமதி.S.நந்தினி

ந.க.எண்: 01/2023-2024 நாள் : 19.05.2023

பொருள் : குடியிருப்பு மனை பிரிவு திருப்பூர் மாவட்டம் - பல்லடம் வட்டாரம் மாணிக்காபுரம் கிராம ஊராட்சியில் - க.ச.எண் : 225/5 - ல் 2.38 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவு வரைபட ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருப்பூர் மண்டலம் ந.க.எண் : KTIR6Z1 நாள் : 03.04.2023
2. ஊராட்சி தீர்மானம் எண் : 55 நாள் : 10.05.2023
3. ஊராட்சி மற்றும் அரசுத்தலைப்பில் தொகை செலுத்தப்பட்டதற்கான இரசீதுகள்.

❁❁❁❁

உத்திரவு :

திருப்பூர் மாவட்டம் , பல்லடம் வட்டாரம் மாணிக்காபுரம் கிராம ஊராட்சியில் க.ச.எண் : 225/5 ல் 2.38 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனை பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.இ.எண் 98/2023-ன் பார்வை (1)-ல் காணும் திருப்பூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அனுமதின் படியும் , பார்வை (2)-ல் காணும் இவ்வூராட்சி தீர்மானத்தின் படியும் , பார்வை (3)-ன் படி ஊராட்சி மற்றும் அரசுத் தலைப்பில் தொகை செலுத்தப்பட்டுள்ளதாலும் திரு.K.சாந்தி என்பவருக்கு கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு வரைபட அனுமதி வழங்கப்படுகிறது.

தொகை செலுத்தப்பட்ட விபரம்:

1.கூராய்வு கட்டணம் : ரூ.2380

2.அபிவிருத்திக் கட்டணம் 1 சென்ட்க்கு ரூ.1000 வீதம் 98 சென்ட்க்கு : ரூ.145000

மொத்தம் : ரூ.147380

3.இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகை நில பயன் மாற்றக் கட்டணம் : ரூ.214200

(அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது)

நிபந்தனைகள் :

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருப்பூர் மண்டலம் அவர்களின் மனைப்பிரிவு வரைபடி அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுப்படுகிறது.
2. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் தவிர வேறு எந்த காரணித்திற்கும் உபயோகிக்கக் கூடாது.
3. மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென அறிவித்தாலும் , கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்.

4. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இவ்வூராட்சியில் அனுமதி பெற வேண்டும்.
5. மத்திய மாநில அரசின் இதர துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
6. மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின் படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவார்.
7. மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு அங்கீகரித்த தீர்மான எண்ணும் நாளும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / எவ்வித விடுதலமின்றி மனைப்பிரிவு நுழை வாயிலில் 6'' * 4'' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரகரிக்கப்பட வேண்டும்.
8. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது.
9. வரைபடம் அங்கீகாரம் 1994-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.
10. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.
11. மேலே கண்ட நிபந்தனைகளில் எவையேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டால் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

தலைவர் / செயல் அதிகாரி
மாணிக்காபுரம் கிராம ஊராட்சி
பல்லடம் வட்டாரம்

பெறுநர் :

திருமதி.K.சாந்தி
க/பெ. குமாரசாமி
கதவு எண்.235/1
சாவடி தோட்டம்
சேடபாளையம், நாரணாபுரம்

நகல் :

1.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை
2.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் , திருப்பூர் மண்டலம்.
3.சார்பதிவாளர் , பல்லடம்.